கேரளாவிலும் அரசின் உரையை முழுமையாக படிக்காத ஆளுநர்!

# சட்டப்பேரவையிலேயே தனது எதிர்ப்பை பதிவு செய்த முதலமைச்சர்!

## ஆளுநருக்கு முதல்வர் பினராயி விஜயன் கண்டனம்!

**திருவனந்தபுரம், ஜன. 21 -**

**கேரள சட்டமன்றத்திலும் அம்மாநில அரசு தயாரித்து கொடுத்த உரையை முழுமையாக வாசிக்காமல் ஆளுநர் தவிர்த்துள்ளதற்கு முதலமைச்சர் பினராயி விஜயன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்கள் மூலம் ஒன்றிய அரசு பல்வேறு பிரச்சனைகளை ஏற்படுத்தி வருகிறது. அந்தவகையில், ஒவ்வொரு ஆண்டு தொடக்கத்திலும் சட்டமன்றத்தில் உரையாற்றும் ஆளுநர்கள், மாநில அரசு தயாரித்து கொடுத்த உரையை முழுமையாக வாசிக்காமல், தங்களது சொந்த கருத்துக்களை சேர்த்து உரையாற்றி வருகின்றனர்.

இதற்கு கடும் எதிர்ப்புகளும், கண்டனங்களும் கிளம்பியுள்ளநிலையில், கேரளாவிலும் அம்மாநில அரசு தயாரித்து கொடுத்த உரையை முழுமையாக வாசிக்காமல் ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் தவிர்த்துள்ளார். இதற்கு முதலமைச்சர் பினராயி விஜயன் சட்டப்பேரவையிலேயே தனது கடும் எதிர்ப்பையும், கண்டனத்தையும் பதிவு செய்தார்.

ஒன்றிய அரசை விமர்சித்துள்ள சில வரிகள் உட்பட பல்வேறு பகுதிகளை தனது உரையிலிருந்து ஆளுநர் தவி ர்த்துள்ளார் என்று அவர் கண்டனம் தெரிவித்துள்ளார். மாநில அமைச்சரவை ஒப்புதல் கொடுத்த உரையை ஆளுநர் முழுமையாக வாசிக்காதது அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது என்று பினராயி விஜயன் குற்றம்சாட்டியுள்ளார்.

உரிய நிதி வழங்காமல் ஒன்றிய அரசு கேரளாவை வஞ்சித்து வருகிறது என்றும், இந்த உண்மையை வாசிப்பதில் ஆளுநருக்கு என்ன தயக்கம் என்றும் பினராயி விஜயன் கேள்வி எழுப்பியுள்ளார். உரையில் ஆளுநர் தவிர்த்த பகுதிகள் அனைத்தும், அவைக்குறிப்பில் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# 2 நாள் கால்பந்து போட்டி - வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு - கோப்பை!

## இரா.ஆவுடையப்பன் வழங்கினார்! ஆ.பிரபாகரன் தலைமை!

நெல்லை, ஜன. 21 -

நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி சிவந்திபுரத்தில் நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் மாவட்ட அளவிலான கால்பந்து போட்டி 2 நாட்கள் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு தொகை மற்றும் வெற்றிக்கோப்பைகளை நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் வழங்கினார்.

நெல்லை மேற்கு மாவட்டம் அம்பை தொகுதி சிவந்திபுரத்தில் மேற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் 2 நாள் கால்பந்து போட்டி நடைபெற்றது.அதன் பின்னர் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசளிப்பு வழங்கும் நிகழ்வு தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன் தலைமையில் அம்பை மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ஜெகன்,வி.கே.புரம் நகர செயலாளர் கணேசன்,அம்பை நகர்மன்றத் தலைவர் கே.கே.சி.பிரபாகரன், அம்பை ஒன்றியக் குழு தலைவர் பரணி சேகர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தவசி மணிகண்டன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுத்தொகை மற்றும் வெற்றிக் கோப்பைகளை வழங்கி பாராட்டினார்.

இதில் ஆறுமுகம்பட்டி என்.ஒய்.எப்.எப்.சி. அணி முதல் பரிசு ரூபாய் 25000 ம் மற்றும் கோப்பையை வென்றது. நிகழ்வில் மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம்,மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், முன்னாள் எம்எல்ஏ மனோஜ் பாண்டியன், வி.கே.புரம் நகர்மன்ற தலைவர் செல்வ சுரேஷ் பெருமாள் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; ஆர்.என்.ரவி, ஆளுநர் உரையைப் படிக்காமல், அரசமைப்புச்சட்டக் கடமையைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு, சட்டப் பேரவையிலிருந்து வெளியேறி இருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; பூனை, கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் இருண்டு போகுமோ? மியா,மியா!**

## கழக இளைஞர் அணிச் செயலாளர் — துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமை!

# பிப். 7-ல் விருதுநகரில் தி.மு.க. இளைஞர் அணி தென் மண்டல நிர்வாகிகள் சந்திப்பு!

## கழகத் தலைவர் — முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

# தலைமைக் கழகம் அறிவிப்பு!

கடந்த 14.12.2025 அன்று திருவண்ணா மலை, கலைஞர் திடலில், 28 கழக மாவட்டங்களுக்கு உட்பட்ட 91 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் முதல் பாகம் வரை, வாக்குச்சாவடி அளவிலான இளைஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் என ஒரு இலட்சத்து 30 ஆயிரம் இளைஞர் அணி நிர்வாகிகள் வெண் சீருடை அணிந்து, "பார் சிறுத்ததோ, படை பெருத்ததோ" என்று சொல்லத்தக்க வகையில், அகிலமே வியக்கும் வண்ணம் மாபெரும் எழுச்சியோடு "தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகி கள் சந்திப்பு" வெற்றிகரமாக நடைபெற்றதைத் தொடர்ந்து;

**முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்கள் சிறப்புரையாற்றிட - **கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் தலைமையில்;

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர்கள் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, கனிமொழி கருணாநிதி எம்.பி., திருச்சி சிவா எம்.பி., ஆ.இராசா எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., மு.பெ.சாமிநாதன், விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, நா.இளைய ராஜா (தலைவர் - தாட்கோ,) ப.அப்துல்மாலிக், கே.இ.பிரகாஷ் எம்.பி., க.பிரபு, பி.எஸ்.சீனிவா சன், சி.ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலையில் - விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் வரவேற்பில்;

வருகிற **07.02.2026** சனிக்கிழமை, மாலை 4.00 மணி அளவில், **விருதுநகர், 'கலைஞர் திடலில் "தென் மண்டல தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு"** நடைபெற உள்ளது.

இதில், தென்மண்டலத்தைச் சேர்ந்த கழக மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், கிளை மற்றும் வாக்குச்சாவடி அளவிலான இளைஞர் அணி நிர்வாகிகள் வெண்சீருடை அணிந்து வரலாறு படைத்திட, அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து இளைஞர் அணி நிர்வாகிகளை "தென்மண்டல நிர்வாகிகள் சந்திப்பிற்கு" அழைத்து வரும் பொறுப்பினை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வரலாறு படைக்கப் போகும் இந்த "தி.மு.க. இளைஞர் அணி தென்மண்டல நிர்வாகிகள் சந்திப்பில்" அமைச்சர் பெருமக்களான கே.ஆர்.பெரியகருப்பன், பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், அர.சக்கரபாணி, பி.மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், த.மனோதங்கராஜ்;

மாவட்டச்செயலாளர்கள்/பொறுப்பாளர்களான இரா. ஆவுடையப்பன், இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ., கோ.தளபதி எம்.எல்.ஏ., நா.இராம கிருஷ்ணன் எம்.எல்.ஏ., தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., மு.மணிமாறன், மேயர் ரெ.மகேஷ், ஈ.ராஜா எம்.எல்.ஏ., வே. ஜெயபாலன், ம.கிரகாம்பெல் ;

மாநகரச் செயலாளர்களான எஸ்.ஆர்.ஆனந்த சேகரன், எஸ்.ஏ.உதயசூரியன், பரமணி ஆனந்த், ஏ.எல்.பி.தினேஷ், சு.சுப்பிரமணியன், எஸ்.ராஜப்பா;

தென்மண்டல இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்களான ம.கணேசன் , தனுஷ் எம்.குமார் , இரா. கிருஷ்ணகுமார் , எ.எஸ்.ஹரிஹரசுதன், சி.எம்.மதியழகன் , நாகனி பா.செந்தில்குமார், பா.வில்சன் மணிதுரை, பை.மு.ராமஜெயம், கே.சம்பத்ராஜா,எம். எஸ்.செல்வம், அ.ஆஜிப்கான், வி.விமல், டி.ஆர்.கிருஷ்ணராஜா, டி.எம்.எஸ்.முகேஷ், வி.அகஸ்தீசன், டி.ஜெகநாதன், ஜெ.ஜான்ரபீந்தர், ஏ.ஆர்.சௌந்தர்ராஜன், மு.இளங்கோ;

மாநகர அமைப்பாளர்களான கே.கே.கருப்பசாமி, கோட்டையப்பன், அ.அப்துல் ரஹ்மான், எஸ்.அருண் சுந்தர், சி.டி.சுரேஷ், த.முத்துசெல்வம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி.பி. ராஜா நன்றியுரையாற்றுகிறார்.

"அண்ணா அறிவாலயம்" **தலைமைக் கழகம்,**
சென்னை—600018.
**தி.மு.க.**
நாள் : 19—01—2026

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு.ப. அழகியநம்பி
### சனவரி 21 (2022)



கழகம் துவக்க காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, சட்டக் கல்லூரியில் மாணவராக பயிலும் போதே 'மாணவர் தி.மு.க.'வில் உறுப்பினராகி பணியாற்ற தொடங்கியவர்.

1971ஆம் ஆண்டு, தூத்துக்குடி உள்ளடக்கிய ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.

நெல்லை மாவட்ட கூட்டுறவு வங்கி தலைவராகவும் – மாநில தமிழ்ச் சங்க தலைவராகவும் பதவி வகித்தவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு பதினான்கு மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# கால நிலைக் கல்வி மற்றும் குளுமைப் பள்ளிகள் திட்டம்!

## அமைச்சர்கள் தங்கம் தென்னரசு – அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தனர்!

சென்னை, ஜன.21

நிதி, சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று முன்தினம் (19.01.2026) சென்னை, தலைமைச் செயலகத்தில் காலநிலைக் கல்வி மற்றும் குளுமைப் பள்ளிகள் திட்டத் தினை துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் வாயிலாக காலநிலை மாற்றச் சவால்களை எதிர்கொள்ள பல்வேறு தடுப்பு மற்றும் தகவமைப்பு நடவடிக்கைளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, தமிழ்நாடு போன்ற நீண்ட நெடிய கடற்கரையினைக் கொண்ட மாநிலத்தில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் வழக்கமாகி வருகின்ற சூழலில், இச்சவால்களை எதிர்கொள்ளத் தேவையான விழிப்புணர்வு மற்றும் கல்வியறிவினை அனைவருக்கும் ஏற்படுத்த வேண்டியதன் முக்கியத்து வத்தினை உணர்ந்து, கடந்த 2025-26-ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு கூட்ட த்தொடரின் போது காலநிலைக் கல்வியறிவினை நம் மாநிலத்தின் கல்வி அமைப்பின் அனைத்து மட்டங்களிலும் ஒருங்கிணைத்து எடுத்துச்செல்ல காலநிலைக் கல்வியறிவு முன்னெடுப்பு (Climate Education Initiative) குறித்த அறிவிப்பு நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களால் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இம்முன்னெடுப்பின் கீழ் மாணவர்களுக்கு கோடைகால மற்றும் குளிர்கால இயற்கை முகாம்கள், காலநிலை மாற்றம் குறித்து பள்ளி ஆசிரியர்களுக்கான உறைவிடப் பயிற்சி முகாம்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு சூழல் அறிவோம் எனும் தலைப்பி லான விநாடி வினா ஆகியவை பள்ளிக்கல்வித் துறை யுடன் இணைந்து சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையால் நடத்த திட்டமிட ப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து, "சூழல் 2.0 விநாடி வினாவின் இறுதிப் போட்டி கடந்த 06.01.2026 அன்று நடைபெற்ற நிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை கூட்ட அரங்கில், "காலநிலைக் கல்வி மற்றும் குளுமைப் பள்ளிகள் முன்னெடுப்புகளின் துவக்கவிழா நடைபெற்றது.

அப்போது பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, காலநிலைக் கல்வி யறிவு பாடத்தொகுதிகளை வெளியிட்டு, காலநிலைக் கல்வி திட்டத்தினைத் துவங்கி வைத்தார்.

அதேபோல், காலநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய சுற்றுப்புற வெப்ப அதிகரிப்பின் காரணமாக நகர்புற வெப்பத்தீவு விளைவு கள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக ஏற்படக்கூடிய தாக்கங்கள் மாணவர்கள் மீதும் அவர்கள் கற்றல் திறனிலும் எதிரொலிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கும் நிலையில், பள்ளி வகுப்பறைகளிம் மாணவர்களுக்கு இதமான கற்றல் சூழலை உருவாக்கும் பொருட்டு, தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் 2025-26ம் ஆண்டிற்கான செயல்திட்டத்தில் குளிர் கூரை முன்னெடுப்பு சேர்க்கப்பட்டு, அம்பத்தூர் பெருந்தலைவர் காமராஜர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

அதன் விளைவாக வகுப்பறைகளின் வெப்ப நிலை 1.5 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை குறைந்தது தெரிய வந்தது. இதனை மேற்கோள்காட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த மாதம் நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான ஆட்சிமன்றக் குழுவின் மூன்றாவது கூட்டத்தில், இத்திட்டம், தமிழ்நாட்டின் அனைத்து பசுமைப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்படும் என அறிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து, நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தி னால் (UNEP) உருவாக்கப்பட்ட பசுமையான எதிர்காலத்திற்கு குளுமையான வகுப்பறைகள் மற்றும் பசுமைப் பள்ளிகளில் அமைவான குளிரூட்ட உத்திகளை ஒருங்கிணைத்தல் ஆகிய புத்தகங்களை வெளியிட்டு, செனாய் நகரிலுள்ள சென்னைப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும், திருவான்மியூர் சென்னை மேல்நிலைப் பள்ளியிலும் குளுமைப் பள்ளிகள் திட்டத்தினை துவங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹ்யூமன் செட்டில்மெண்ட்ஸ் நிறுவனத்தின் பசுமைப் பள்ளிகள் தாக்க அறிக்கையினை வெளியிட்டு, சென்னை, அம்பத்தூர் பெருந்தலைவர் காமராஜர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கொல்லுமேடு அரசு மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு பசுமைப் பள்ளிகளுக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை திருமதி சுப்ரியா சாஹு, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, முனைவர். பி. சந்திர மோகன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான சிறப்புச் செயலாளர் அனுராக் மிஸ்ரா, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய தலைவர் முனைவர் எம்.ஜெயந்தி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர், ஆ.ர.ராகுல் நாத், மாநில திட்ட இயக்குநர், சமக்ர சிக்ஷ அபியான், மரு. எம். ஆர்த்தி, இயக்குநர், பள்ளிக் கல்வித்துறை, முனைவர் எஸ்.கண்ணப்பன், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் உதவித் திட்ட இயக்குநர், கிரிஷ் பால்வே, உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எம்.சரவணகுமார், இயக்குநர், மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (SCERT), திருமதி என்.லதா, இணை இயக்குநர், பள்ளிக் கல்வித் துறை, திருமதி. எஸ்.சாந்தி, துணை இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, திருமதி.காமாட்சி, இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹ்யூமன் செட்டில்மெண்ட்ஸ், தலைவர் (உட்கட்டமைப்பு & காலநிலை) அமீர் பசாஜ், மூத்த ஆலோசகர்கள், ஐக்கிய நாடுகள் சுற்றுச் சூழல் திட்டம், துர்கானந்த் பல்சாவர், கே.பி. மணிகண்டன், பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள் மற்றூம் அரசு உயர் அலுவலர்கள்ஆகியோர் உடனிருந்தனர்.